# NATIONAL COLLEGE

(Autonomous)
College with Potential for Excellence
Nationally Re-Accredited at 'A+' Grade by NAAC
**TIRUCHIRAPALLI - 620 001**
**TAMILNADU**

Since 1919

## Department of Library and Information Science
## CENTRAL LIBRARY



Cordially invites you for the
Dept. Association Inauguration and orientation for I UG Students
On the 20th October (Wednesday) 2021 at 11.30 P.M at the Audio Visual Theatre.

*Dr. R. Elavarasu*
Dean of Arts and Head of the Dept. in English, National College
Welcome Address

*Dr.R.Sundhararaman*
Principal, National College,
Presidential Address


*Dr.P.Raghavan*
Vice-Principal and Librarian (Retd.), National College
Introductory Remarks

*Dr.T.Sureshkumar*
Librarian, National College
Vote of Thanks

**Shri.K.Raghunathan**
Secretary

**Dr.R.Sundararaman**
Principal

**Dr.T.Sureshkumar**
Organizing Secretary




College
Re-Accredited at A+
College with Potential
Dr.V.Krishnamurthy
Cordially
NCT

# தேசியக் கல்லூரி (தன்னாட்சி) திருச்சிராப்பள்ளி
## நூலகப் புத்தாக்கப் பயிற்சி

தேசியக் கல்லூரியின் முதலாண்டு பயிலும் இளநிலை, முதுநிலை சேர்ந்துள்ள மாணவர்களுக்கான நூலக விதி முறைகள் மற்றும் பயன்பாடுகள் பற்றிய பயிற்சி 20.10.2021 புதன் நண்பகல் நூலக அரங்கில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் **முனைவர். R. சுந்தரராமன்** அவர்கள் நிகழ்விற்குத் தலைமையேற்று உரையாற்றினார். அவர் தமது தலைமையுரையில் மாணவர்கள் நூலகத்தை எவ்வாறு பயனுள்ள முறையில் பயன்படுத்த வேண்டும் என்பதை விளக்கினார். மேலும் வளர்ந்து வரும் நவீன உலகில் கணினியைப் பயன்படுத்தி நூல்களைப் பயன்படுத்தும் முறையை விளக்கியதோடு இக்கல்லூரி அதற்குரிய வசதிகளை நிறைவேற்றிக் கொண்டு வருவதனை மாணவர்கள் பயனுள்ள முறையில் பயன்படுத்திக்கொள்ள அறிவுறுத்தினார்.

கல்லூரிச் செயலர் **திரு. கா.இரகுநாதன்** அவர்கள் கணினி முறை மூலம் மாணவர்களுக்கு நூல்கள் வழங்கும் நூலக அடையாள அட்டையை மாணவர்களுக்கு வழங்கினார்.

முனைவர். **R. இளவரசு** கலைத்துறை புலன் முதன்மையர் அவர்கள் வரவேற்புரை வழங்கினார் மற்றும் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினார்.

ஓய்வு பெற்ற முன்னாள் கல்லூரி நூலகரும் சிறப்பு விருந்தினருமான **முனைவர். P. ராகவன்** நூலகத்தில் உள்ள எல்லா நூல்களும் முறையாகக் கணினி மயமாக்கப்படுவதற்கு ஆதரவு நல்கிய செயலர், முதல்வர் ஆகியோருக்கு நன்றி கூறினார். மேலும் மாணவர்கள் எவ்வாறு கணினி மாயமாக்கப்பட்ட நூலகத்தைப் பயன்படுத்துவது என விளக்கினார். ஒவ்வொரு துறை மாணவர்களுக்கும் ஒவ்வொரு நாள் என்ற முறையில் இப்பயிற்சி தொடரும் என்பதையும் தெரிவித்ததார். கல்லூரியில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் இம்முறையை இம்மாதத்திற்குள் தெரிந்து கொள்ள இப்பயிற்சி தொடர்ந்து அளிக்கப்படும் என்றார்.

நூலகர் முனைவர். T. சுரேஷ்குமார் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். கல்லூரிப் பேராசிரியர்கள். நூலக உதவியாளர்கள் பி.லெட்சுமணன் கி.அன்புமணி அ.ராதாஜெயலெட்சுமி ஆர்.கலியமூர்த்தி சே.உமாமகேஸ்வரி உள்ளிட்ட அலுவர்களும், மாணவர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

# National College (Autonomous) Trichy.

## Library Orientation Programme for I UG Students

The General Library of National College conducted an orientation programme for fresher's on 20th October 2020 to initiate them into the habit of reading and familiarize them with the art of using library resources effectively.

The Principal of the college **Dr. Sundararaman** highlighted the subtle pleasures for reading. He advised the students to develop the habit of reading which

sharpened the intellect and enriched the soul. Students should widen their reading interest beyond the subjects and syllabus to cover literature, novels, and history.

The Resource person **Dr.P.Raghavan,** former Librarian and Vice Principal (Retd.) of the National college has observed that adolescence was the most crucial period in one's Life and it was the right time to form the right habits which would propel the students to higher planes. He noted that National College with a long history of nearly a century boasts of a marvelous wealth of books on a variety of subjects. He explained the free availability of various learning resources including the thousands of books and journals on the subjects as well as for competitive examinations, the free browsing facility, availability of online journals and news papers and general news magazines.

The secretary of the college, **Sri. K.Raghunathan** launched the issue of bar coded Idendity cards to the students. He was confident that the computerization of library would enable optimal utilization of the invaluable collection of volumes which had been built up over decades.

**Dr.R.Elvarasu,** Dean of Arts and HOD of English together the welcome address and **Dr. T. Sureshkumar,** Librarian of the National College proposed a vote of Thanks.

# NATIONAL COLLEGE (Autonomous)

Tiruchirappalli-620 001

Department of Library and Information Science

Cordially invite you to



## ONE DAY STATE LEVEL WORKSHOP ON

# "Rejuvenation, Restoration and conservation of Learning Resources"



Resource Person

## Dr.P.Perumal

Former conservator & Librarian, Maharaja Serfoji's Mahal Library, Thanjavur,

will deliver the lecturer and conduct the technical Sessions.

### About the Workshop

Preservation of library materials is one of the major problems faced by the library professionals. Conventionally, books need to be preserved and decay process needs to be slowed down. Restoring the condition of the books from unusable to usable is through treatment and repair is one of the essential requirements to be followed at the library. This workshop will provide training on conservation techniques to enhance the skills of the library staff members.

### Date & Venue

Date : 27th November-2021

Time : 9.30 am to 4.00 pm.

Venue : **Audio-Visual Theatre, Resource Center,**
National College (Autonomous), Tiruchirappalli-620001

### Registration

- Interested candidate are requested to register on or before 25th November-2021
- Registration is limited to 30 Participants. Only those who have received conformation through mail will be permitted to attend the workshop
- Spot Registration Fees Rs. 200/-
  (Including Workshop kit, Certificate and Lunch)

Target Participants: Library Professionals only.

Kindly register at: https://forms.gle/neTeP7hrXmxVaPSX8

Dr.T.Sureshkumar
Organizer

Dr.R.Sundararaman
Principal

Shri.K.Raghunathan
Secretary



IATIONAL COLLEGE (Autonomous)
Tiruchirappalli - 620 001.
epartment of Library and Information Science
ONE DAY
STATE LEVEL WORKSHOP
ON
EJUVENATION, RESTORATION
ERVATION OF LEARNING RESOURCES"

# தேசிய கல்லூரியில் ஒருநாள் பயிற்சி பட்டறை

## ஒருநாள் தேசியப் பயிலரங்கம்

27-11-2021

திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரியின் நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறை சார்பாக 'கற்றல் வளங்களைப்புதுப்பித்தல் மறுசீரமைத்தல் மற்றும் பாதுகாத்தல்'என்னும் பொருண்மையிலானஒருநாள் தேசியப் பயிலரங்கம் 27-11-2021 அன்று கல்லூரி ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்றது. பயிலரங்கின் தொடக்க விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் இரா. சுந்தரராமன் தலைமையுரை ஆற்றினார். அப்பொழுது 'நூலகத்துறையானதுஒரு கல்லூரியின் முதுகெலும்பைப் போன்றது, அது சரியாக இருந்தால்தான் பிற துறைகள் சிறப்பாக நடைபோட முடியும்' என்று கூறினார். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளரும் கல்லூரி நூலகருமான முனைவர் த. சுரேஷ்குமார், இப்பயிலரங்கின்நோக்கங்களை எடுத்துரைத்து, சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார்.

தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகத்தின் மேனாள் பாதுகாப்பாளர் முனைவர் ப. பெருமாள், இப்பயிலரங்கின் சிறப்புப்பயிற்றுநராகச் செயல்பட்டார்.இவர் தாயகத்திலும்அயலகத்திலும் பல்வேறு நூலகப் பயிற்சிப்பட்டறைகளை நடத்திய தன் அனுபவத்திலிருந்து பங்கேற்பாளர்களுக்குக் கருத்துக் கொடை வழங்கினார். பழைய பனுவல்களைப் பேணுவதில் உள்ள நவீன அறிவியல் முறைகளை விளக்கியதோடுநம்நாட்டுப் பாரம்பரிய பனுவல் பாதுகாப்பு நெறிகளைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். குறிப்பாக, மழை வெள்ள காலங்களில் நூல்களின் மீதுபடியும் பூஞ்சைகளை விலக்குவது குறித்தும் கவனப்படுத்தினார். கருத்துரையும் செய்முறையும் கொண்ட இப்பயிலரங்கில் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்தமுப்பதிற்கும் மேற்பட்ட நூலகப் பாதுகாப்பாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

முன்னதாக, பயிலரங்கின் தொடக்க விழாவிற்குக் கல்லூரியின் மேனாள் நூலகரும் துணைமுதல்வருமான முனைவர் பி. இராகவன் வரவேற்புரை நல்க,இந்நாள்துணைமுதல்வரும் வணிகவியல் துறைத்தலைவருமான முனைவர் கே. குமார் நன்றி கூறினார். பயிலரங்கின் நிறைவில் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

02 தின மலர் 27 : 11 : 21

நூலகங்கள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த கருத்தரங்கம்: தேசியக் கல்லூரி, கருமண்டபம், திருச்சி. காலை 9.30 மணி முதல். சிறப்புரை: தஞ்சை சரபோஜி மகாராஜா மகால் நூலக அலுவலர் முனைவர் பெருமாள்.

01 தின மலர் 2:12:21

# 'நூலகத்துறையே முதுகெலும்பு'

திருச்சி, டிச. 2–

திருச்சி தேசியக் கல்லூரி நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறை சார்பில் கற்றல் வளங்களை புதுப்பித்தல் மற்றும் மறு சீரமைத்தல் குறித்த கருத்தரங்கம் நடந்தது.

கல்லூரி முதல்வர் சுந்தரராமன் தலைமை வகித்தார். தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலக முன்னாள் பாதுகாப்பாளர் பெருமாள் பேசுகையில், ''நூலகங்களில் ஆவணங்களை பாதுகாப்பது சவாலானது.

பண்டைய காலங்களில் பாரம்பரிய முறைப்படி ஆவணங்கள், புத்தகங்கள் பாதுகாக்கப்பட்டன. கல்லூரியில் நூலகத்துறை முதுகெலும்பு போன்றது. அது சிறப்பாக இருந்தால்தான் மற்ற துறைகள் நன்றாக செயல்பட முடியும்'', என்றார். கல்லூரி முன்னாள் நூலகர் ராகவன், வரவேற்றார். வணிகவியல் துறைத்தலைவர் குமார் நன்றி கூறினார்.

# National College

(Autonomous)
College with Potential for Excellence
(Nationally Re-Accredited at 'A+' Grade by NAAC)
Tiruchirappalli-620 001

Since 1919

***Department of Library & Information Science***

Cordially invites you to the

# *Valedictory Function*

of the Internship Training of Librarianship
on 27th Jan 2021 at 11.30 am

Welcome Address
**Dr.K.Kumar**
Vice Principal, Dean of Commerce, NCT



Presided by
**Dr.R.Sundararaman**
Principal

Felicitation
**Dr.V.Nandagopalan**
Vice Principal

Venue: : AV Hall, Resource Center

Dr.T.Sureshkumar
Librarian

Shri.K.Raghunathan
Secretary


(National
by NAAC)

ஒஅ. தினமணி, 28/01/2021

# தேசியக் கல்லூரி நூலகத் துறையின் வேலைவாய்ப்பு பயிற்சி நிறைவு

திருச்சி, ஜன. 27: தேசியக் கல்லூரி நூலகத் துறையில் நடைபெற்ற வேலைவாய்ப்பு பயிற்சி புதன் கிழமை நிறைவு பெற்றது.

இக்கல்லூரியின் நூலகத் துறையில் கடந்த டிச.28 ஆம் தேதி தொடங்கிய நூலக வேலைவாய்ப்புத் துறை பயிற்சிப் பட்டறையில் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி முதுநிலை நூலகம், தகவலியல் துறை மாணவர்கள் இப்பயிற்சி பட்டறையில் பயிற்சி பெற்றனர்.

நூலக மேலாண்மை, நூலகப் பகுப்பாய்வு, நூலக செயல்பாடு, புதிய உத்திகள் உள்ளிட்டவை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

புதன்கிழமை நடைபெற்ற நிறைவு விழாவில் தேசியக்கல்லூரி முதல்வர் ரா. சுந்தரராமன் தலைமை வகித்து, பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கிப் பேசினார். கல்லூரிச் செயலர் கா. ரகுநாதன் முன்னிலை வகித்தார்.



நூலகத் துறை வேலைவாய்ப்பு பயிற்சி முடித்து சான்றிதழ் பெற்ற மாணவர்களுடன் தேசியக் கல்லூரி முதல்வர் ரா. சுந்தரராமன் உள்ளிட்டோர்.

துணை முதல்வர் நந்தகோபாலன் வாழ்த்தினார். பேராசிரியர்கள் பெனட், ராகவன், ராமஜெயம் ஆகியோர் பேசினர். பேராசிரியர்கள், உதவி நூலகர், உதவியாளர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

வணிகவியல் பள்ளி புல முதன்மையர் குமார் வரவேற்றார். பயிற்சி பட்டறை ஒருங்கிணைப்பாளர் த. சுரேஷ்குமார் நன்றி கூறினார்.